ADM COURT, SANKARANKOVIL.

**தேதி 07/09/2019**

**அசல் வழக்கு எண். 115/2014**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியப்பிரமாணத்தின் பேரில் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3,4 பிரதிவாதிகள் என்னிடம் நான் கடை வைத்திருந்ததை தகராறு பண்ணியதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் நாதகிரி முருகன் ஜவுளிக்கடை உள்ளது என்றால் சரிதான். நாதகிரிமுருகன் எனது கணவரின் பெயரும் ஆகும். நாதகிரி முருகன் ஜவுளிக்கடையை எனது கணவர்தான் நிர்வாகித்து வருகிறாரா என்றால் அவர் விவசாயம் செய்வதால் நான்தான் நிர்வாகி வைத்து வருகிறார் அவர் கரிவலம்வந்தநல்லூரில் விவசாயம் செய்து வருகிறார். என்ன என்ன சர்வே எண்கள். என்ன என்ன சொத்துக்கள் என் கணவர் விவசாயம் செய்து வருகிறார் என்றால் அது அவருக்குதான் தெரியும். அந்த கடையை பொறுத்து நான் வாடகைதாரர் இல்லை என்றும், என் கணவர்தான் வாடகைதாரர் என்றால் சரியல்ல. என் கணவர் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்ததால் அவர் நிர்வாகித்து வருகிறார் என்றும், அவர்தான் வாடகை செலுத்தி வருகிறார் என்றும் ஆகிய விபரங்கள் தெரியவரும் என்பதால் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எத்தனை வருடங்களாக ஜவுளிக்கடை நடத்தி வருகிறேன் என்றால் சுமார் 2 வருடங்கள்தான் நான் நடத்தி வருகிறேன் அதற்கு முன்பு என் மாமானார் நடத்தி வருகிறார். அந்த கடையை எனது மாமானார்தான் வாடகைக்கு

எடுத்தாரா என்றால் அவருடைய காலத்திற்கு பின்பு எனது கணவர் பார்த்து வந்தார், தற்போது நான்தான் கவனித்து வருகிறேன். 1-ம் பிரதிவாதியிடம்தான் நான் வாடகை செலுத்தி வந்தேன். தாவா சொத்தானது கரிவலம்வந்தநல்லூர் பிள்ளைமார் பொது மகமை சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் 9 கடைகள் உள்ளது. நான் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மற்ற 9 வாடகைதாரர்கள் யார்யார் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மற்ற நபர்கள் யாரிடம் வாடகை கொடுக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது 2013-ல் பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு பாத்தியப்பட்டதாக வழக்குரையில் கூறியதற்கு ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வாடகை கட்டியதற்கு ரசீது கொடுத்துள்ளார்கள் அதன் மூலம் தெரிந்து கொண்டேன். ரசீது கொடுத்ததால் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். சுப்பையா பிள்ளை, முருகன் ஆகியோர்களுக்கு முன்பு யார் தலைவர், செயலாளராக இருந்தார்கள் என்றால் இவர்கள்தான் பதவி வகித்து வருகிறார்கள். சுமார் 80 வருடங்கள் ஆக அந்த கட்டிடம் இயங்கி வருகிறதா என்றால் எனது மாமனார் 40 வருடங்க்ள இருந்ததால்தான் தெரியும். இந்த கட்டிடமானது சங்கரன்கோவில் இருந்த ராஜபாளையம் செல்லும் மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். நான் ரூ700 வாடகை செலுத்தி வருகிறேன். எனது மாமானார் காலத்திலிருந்து தற்போது வரை வாடகை ரூ.700 செலுத்தி வருகிறோம். எங்கள் கடை அருகில் அதேபோல் உள்ள கடைகள் ரூ.3000, 4000-த்திற்கு வாடகை விடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு என் கடையை பொறுத்து மட்டுமே தெரியும். 3,4 பிரதிவாதிகள் புதிய நிர்வாகிகளாக

அவர்கள் வந்ததாக சொல்லி எனக்கு இடையூறு செய்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். 3,4 பிரதிவாதிகள் அந்த கடை எங்கள் அப்பாவிற்கு உரிமை உள்ளது என்றும், எங்களுக்கு உள்ள சொந்த இடம் என்று சொல்லி தகராறு செய்தார்களா என்றால் அப்படி இல்லை. வாடகை கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். எனக்கு எழுத படிக்க தெரியும. எனது கணவரின் கையொப்பத்தினை என்னால் பார்த்து சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் 06.01.214-ம் தேதிய தீர்மான புத்தகத்தில் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பம் அல்ல. 1,2 பிரதிவாதிகள் எனது கணவரை கடை வீட்டு காலி செய்ய சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. 1,2 பிரதிவாதிகள் கடை விட்டு காலி செய்ய சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு என் கணவர் 10.10.2013-ல் அவரின் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. அந்த பதில் அறிவிப்பில் 1,2 பிரதிவாதிகளுக்கு அந்த கடையில் உரிமையில்லை என்றும், 3,4 பிரதிவாதிகள்தான் தலைவர், செயலாளர் என்று எனது கணவர் ஒப்பு கொண்டார் என்றால் சரியல்ல. அதை ஒப்பு கொண்டு 3,4 பிரதிவாதிகளிடம்தான் எனது கணவர் வாடகை செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் தலைவர், செயலாளர் பொறுப்பு ஏற்றவுடன் வாடகையாக ரூ.1500 மற்றும் முன் பணம் ரூ20,000 கூட்டி தர வேண்டும் கேட்டார்கள் என்றால் சரியல்ல. வாடகை மற்றும் முன் பணத்தை கூட்டி தர மறுத்து 1,2 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிச்சையா பெயரில் மின் வரி ரசீது உள்ளது, அவர் யார் என்றால் எனக்கு தெரியாது எனது

மாமானாருக்கும் தெரிந்திருக்கலாம், வா.சா.ஆ.2 த்திற்கும், தாவா சொத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கடையினை எனது கணவர்தான் நடத்தி வருகிறார் என்று ஊராட்சி தலைவர் சான்று அளித்துள்ளார் என்றால் சரியல்ல. வா..சா.ஆ.3 இந்த வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வாடகை இருந்து வருவதற்கு வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வாடகை ஒப்பந்த காலம் முடிந்ததால் 3,4 பிரதிவாதிகளிடம் கடையை ஒப்படைக்க வேண்டும் என்றாதல் சரியல்ல. 1,2பிரதிவாதிகள் பண மோசடிய செய்ததால் அவர்களை தலைவர், செயலாளர் பதவிலிருந்து நீக்கம் செய்து தற்போது 3,4 பிரதிவாதிகள் தலைவர், செயாலளர் பதவியில் இருந்து வருகிறார்கள். என்றால் சரியல்ல. அதை ஒப்பு கொண்டு எனது கணவரும், தீர்மானத்தில் கையொப்பம ் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும், 3,4 பிரதிவாதிகள் தலைவர், செயலாளராக ஒப்பு கொண்டு, வாடகை செலுத்தி வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பி விட்டு தற்போது மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுடன் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகளின் உரிமையினை நான் மறுத்ததால் எனக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நான் வாடகைதாரர் அல்ல என்றும், வழக்கை தாக்கல் செய்ய சட்ட உரிமையில்லை என்றால் சரியல்ல., அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.